செய்தி வெளியீடு எண்-403 நாள் – 22.7.2009

**சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று**
**பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 20 பேரின் குடும்பங்களுக்கும் காயமடைந்த 4 பேருக்கும் மொத்தம் 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி !**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

**தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த கோரிக்கைகள்மீது, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று; அந்த அறிக்கைகளின் அடிப்படையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட சம்பவங்களில் உயிரிழந்த 20 பேரின் குடும்பங்களுக்கும் காயமடைந்த 4 பேருக்கும் மொத்தம் 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். அதன் விவரம்:**

**திருநெல்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.மாலைராஜா கோரிக்கையை ஏற்று, பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கின் நீச்சல் குளத்தில் மூழ்கி இறந்த முகம்மது ஆசிக் என்னும் மாணவனுக்காக அவனது தந்தை திரு. சாகுல் அமீது என்பவருக்கு 1 இலட்சம் ரூபாய்;**

**கிருஷ்ணகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.செங்குட்டுவன் கோரிக்கையை ஏற்று, அவரது தொகுதியில் உள்ள கங்கலேரி கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் உஷா, தாரணி என்கிற பல்லவி ஆகிய இருவரும் கிணற்றில் தவறி விழுந்து மூழ்கி இறந்தமைக்காக உஷாவின் தந்தை திரு. கோபால், தாரணி என்கிற பல்லவியின் தந்தை திரு.ராஜா என்ற திம்மராஜ் ஆகிய இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 1 இலட்சம் ரூபாய்;**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட மனுவின் மீது மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகர் கைலாசநாதர் கோவில் குளத்தில் குளிக்கச் சென்று நீரில் மூழ்கி உயிரிழந்த யோகானந்தம், சங்கர் ஆகிய இருவரில் யோகானந்தத்தின் தந்தை திரு.செல்வம் என்பவருக்கும், சங்கரின் தந்தை திரு.அன்பழகன் என்பவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 1 இலட்சம் ரூபாய்;**

**குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.மாணிக்கம் கோரிக்கையை ஏற்று, திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டை சாலையில் புளியமரத்தில் வேன்மோதி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த 7 பேருக்கும் காயமடைந்த 11 பேருக்கும் ஏற்கனவே முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டது. அவர்களில் காயம்பட்டிருந்த மூர்த்தி என்கிற நாராயணமூர்த்திக்கு 15 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமைக்காக அவரது தந்தையார் ராஜு என்பவருக்கு மேலும் 35 ஆயிரம் ரூபாய் சேர்த்து 50 ஆயிரம் ரூபாய்; அதே விபத்தில் உயிரிழந்த மற்றொருவரான சேலம் மாவட்டம் குண்டூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் என்பவருக்காக அவரது தந்தை திரு.இராமசாமிக்கு 50 ஆயிரம் ரூபாய் என இருவரது குடும்பங்களுக்கும் 85 ஆயிரம் ரூபாய்;**

**திருவையாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை.சந்திரசேகரன் கோரிக்கையை ஏற்று, தஞ்சை மாவட்டத்தில் கடந்த நவம்பர் டிசம்பர் மாதங்களில் பெய்த பெருமழையின்போது, குளிர்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நால்வரில் திருக்காட்டுப்பள்ளி பி. ரிச்சர்டு ராஜ் என்பவருக்காக அவரது தாயார் திருமதி விக்டோரியா; வரகூர் அந்தோணிசாமி என்பவருக்காக அவரது மனைவி திருமதி ரோஸ் மேரி; பெரும்புலியூர் மகாலெட்சுமி என்பவருக்காக அவரது தந்தையார் திரு. ராஜாராம்; பூதலூர் அமல் சின்னப்பராஜ் என்பவருக்காக அவரது தந்தையார் திரு. செல்வராஜ் ஆகிய நால்வருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் ;**

**முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.குழந்தை தமிழரசன் கோரிக்கையை ஏற்று கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை கிராமத்தில், கிணற்றில் தவறி விழுந்து இறந்துபோன சூர்யா என்னும் சிறுவனுக்காக அவனது தந்தை திரு.சண்முகம் என்பவருக்கு 50 ஆயிரம் ரூபாய்;**

**மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், சேலம் மாவட்டம், தோரமங்கலம் கிராமத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த சவுண்டப்பன் என்கிற விக்னேஷ் என்பவருக்காக அவரது வாரிசுதாரருக்கு 50 ஆயிரம் ரூபாய்; காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் ஜெகந்நாதன் என்பவருக்கு 15 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 65 ஆயிரம் ரூபாய்;**

**அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட மற்றொரு மனுவின் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அருகில் சாலை விபத்தில் உயிரிழந்த திருமதி கணபதி அம்மாள் சத்துணவு உதவியாளர் என்பதால் குடும்ப நல நிதி திட்டத்தின்கீழ் அவரது குடும்பத்தாருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், விபத்து நிவாரண நிதியாக 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. அதே சாலை விபத்தில் உயிரிழந்த மாணவி காமாட்சியின் குடும்பத்திற்கு விபத்து நிவாரண நிதியாக ஏற்கனவே வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாயுடன் அக்குடும்பத்திற்கு மேலும் 40 ஆயிரம் ரூபாய்;**

**பேர்ணாம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.சின்னசாமி கோரிக்கையை ஏற்று, வேலூர் மாவட்டம், சாத்கர் கிராமத்தைச் சேர்ந்த நஸ்ருதீன், சுரேஷ் குமார் இருவரும் ஆற்றில் திடீரென வெள்ளம் வந்ததால் மண் சரிந்து நீரில் மூழ்கி இறந்தனர். உயிரிழந்த நஸ்ருதீன் என்பவருக்காக அவரது தாயார்**

**திருமதி சுபைதா பேகம்; சுரேஷ்குமாரின் தந்தை திரு.மனோகரன் ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 1 இலட்சம் ரூபாய்;**

**பெருந்துறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.பொன்னுதுரை கோரிக்கையை ஏற்று, ஈரோடு மாவட்டம், பெருந்துறை கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதா என்பவர் கொலை செய்யப்பட்டதால், தந்தையும் ஏற்கனவே இறந்து விட்ட நிலையில் ஆதரவற்றவர்களான குழந்தைகள் பிரியா, பிரகாஷ், மலர்வதி ஆகியோருக்கு 50 ஆயிரம் ரூபாய்;**

**திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.என்.சேகரன், கோரிக்கையை ஏற்று, திருச்சி மாவட்டம், செந்தண்ணீர்புரம் தனியார் ஆலையில் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டபொழுது பாய்லர் டேங்க் வெடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மூவரில் ராஜேஷ் என்பவரின் தந்தை திரு.அம்பேத்கர்; ஜான்கென்னடி என்பவரின் தாயார் திருமதி பொன்மாயி; சரவணன் என்பவரின் மனைவி திருமதி எஸ்.நித்யா ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்; அவ்விபத்தில் காயமடைந்த திரு.செந்தில்குமார், திரு அய்யப்பன், திரு. முகமது சலீம் ஆகிய மூவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் 45 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 1 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய்;**

**– எனப் பல்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 20 பேரின் குடும்பங்களுக்கும், காயம்பட்ட 4 பேரின் குடும்பங்களுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து மொத்தம் 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (22.7.2009) ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9